**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**MCOP - 34/2023**

**நாள் – 31.07.2025**

**PW – 1** ரவிச்சந்திரன்

**த/பெ.** பொன்னுச்சாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 31st day of July 2025)**

**குறுக்கு விசாரணை**

1. நான் 7–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த நபர் யார் என்று எனக்குத் தெரியாது. மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டதா? என்று எனக்கு தெரியாது. எனது மகன் டெய்லராக வேலை பார்த்து மாதம் ரூ.20,000/– சம்பாதித்து வந்தார் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் சென்ற வாகனத்தின் மீது எந்த வாகனமும் மோதவில்லை என்றால் சரிதான். வேறு எந்த வாகனமும் விபத்தில் ஈடுபடவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. விபத்தில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் வாகனத்தை ஓட்டிய நபருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அதனால் தான் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வின் போது ஓட்டுநர் உரிமம் சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் லிப்ட் கேட்டு பயணம் செய்த வாகனத்தின் ஓட்டுநர் உரிமம் எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 விபத்து பதிவேட்டில் விபத்தில் அடிபட்ட நபரின் பெயர் மற்றும் விலாசம் எதுவும் தெரியாது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அந்த அடிபட்ட நபரை மருத்துவமனைக்கு கொண்டு வந்தவரின் பெயர் எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. எனது மகன் பிரபாகரனின் இறப்பு சான்று மற்றும் ஆதார் அடையாள அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேன். எனது மகன் விபத்து சமயம் தலைக்கவசம் அணியாமல் வாகனத்தில் சென்றதால் தான் விபத்தில் அவரது தலையில் அடிபட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.8 பிரேத பரிசோதனை சான்றில் மருத்துவரின் கையொப்பம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனதுமகனின் இறப்பினால் எங்களுக்கு எந்தவொரு வருமான இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதேபோல், நாங்கள் எனது மகனை சார்ந்திருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தானது இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் நடக்கவில்லை என்றால் சரியல்ல. வேறொரு விபத்தில் தேடிக்கொண்ட இறப்புக்கு இழப்பீடு கேட்டு இந்த வாகனத்தை பயன்படுத்திக் கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வானத்தை ஓட்டிய நபருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாததால் அந்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. குற்ற வழக்கில் தாக்கல்செய்த இறுதி அறிக்கையில் வாகனத்தை ஓட்டிச்சென்ற நபர் இறந்து விட்டதால் அந்த குற்ற வழக்கானது முடிக்கப்பட்டு விட்டடுள்ளது

என்றால் அது எனக்கு தெரியாது. அதனால், இந்த மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :–** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.31 12:59:44 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**